புதுச்சேரி அரசு
போக்குவரத்துத் துறை

செய்திக் குறிப்பு

எண்:04/TD/DTC/PA/2015 தேதி:11.08.2015

## இருசக்கர ஓட்டுநர் உரிமம் பெறுவதற்கு தலைக்கவசம் அவசியம்: போக்குவரத்துத் துறை அறிவிப்பு

புதுச்சேரியில் விற்பனையாகும் வாகனங்களில் சுமார் 85 சதவீதம் இருசக்கர வாகனங்களே. சென்ற 2014-2015-ல் விற்பனையான 52325 மோட்டார் வாகனங்களில், 45465 இருசக்கர வாகனங்களாகும்.

மோட்டார் வாகனச் சட்டத்தின்படி இருசக்கர வாகனம் ஓட்டுவோர் மற்றும் பயணிப்போர் தலைக்கவசம் (ஹெல்மெட்) அணிவது கட்டாயமாகும். இருசக்கர வாகன விபத்தில், தலையில் ஏற்படும் பாதிப்பு பெரும்பாலும் உயிர் போக்கும் அளவிற்கு அமைந்து விடுகிறது. தலையில் ஏற்படும் காயத்தால் மூளை, தண்டுவடம் மற்றும் நரம்பு மண்டலங்களிலும் பாதிப்பு ஏற்படுத்தக் கூடும் என்பதால் முக்கிய அவயங்கள் செயல்படாத நிலைமையும் ஏற்பட வாய்ப்புள்ளது. விபத்தினால் தனக்கும் குடும்பத்தாருக்கும் ஏற்படும் பாதிப்பினை கருத்தில் கொண்டு, இரு சக்கர வாகனங்களில் பயணிப்போர் அனைவரும் தலைக்கவசம் அணிவது அவசியம்.

ஒவ்வோர் ஆண்டும் நம் நாட்டில் பல்லாயிரக்கணக்கானோர் இருசக்கர வாகன விபத்தால் உயிரிழக்கின்றனர். புதுச்சேரியில் சென்ற ஆண்டுமட்டும் 620 இருசக்கர வாகன விபத்து நடைபெற்று 45 பேர் உயிரிழந்துள்ளனர். இருசக்கர வாகன ஓட்டுவோர் பலரும் இளைஞர்கள் என்பதால் நாட்டின் எதிர்கால சந்ததியினரின் பாதுகாப்பான இருசக்கர வாகனப் பயணம் தரமான தலைக்கவசம் அணிவதால் உறுதிசெய்யப்படுகிறது என்பதை உணர்தல் வேண்டும். மேனிலை வகுப்பு செல்லும் மாணாக்கர்கள் மற்றும் கல்லூரி மாணாக்கர்கள் இருசக்கர வாகனங்களை அதிகம் பயன்படுத்தும் நிலமை உள்ளது. தமது மகன் மற்றும் மகளது பயண தேவைக்காக அன்பின் அடையாளமாக இருசக்கர மோட்டார் வாகனம் வாங்கிக் கொடுக்கும் பெற்றோர், அவர்களது பாதுகாப்பினைக் கருத்தில் கொண்டு தலைக்கவசத்தையும் வாங்கிக் கொடுத்து அதனை அணிய கட்டாயப்படுத்துதல் நல்லது. பெற்றோர்கள் குழந்தைகளுக்கு முன் உதாரணமாகத் திகழ்வதால், இருசக்கர வாகனங்களில் பயணம் செய்யும் பெற்றோர் அனைவரும் முதலில் ஹெல்மெட் வாங்கி அணிவதால் அவர்களது மகனோ மகளோ ஹெல்மெட் அணிவதை ஊக்குவிப்பதாக அமையும்.

...2

விபத்து ஏற்பட்டபின் பல லட்சம் ரூபாய்க்குமேல் செலவு செய்து உயிர்காக்க போராடுவதைவிட தலைக்கவசம் அணிந்து தலைக்குவரும் ஆபத்தை தவிர்த்து தனக்கும் குடும்பத்திற்கும் ஏற்படும் இன்னல்களை குறைக்கவேண்டியது அவசியம். வந்தபின் அல்லல் படுவதைவிட வருமுன் காப்பதே அறிவுடையார் செயல் என்பதால், இருசக்கர வாகன ஓட்டுநர் அனைவரும் ISI மார்க் உள்ள தரமான தலைக்கவசம் அணிந்து வாகனம் ஓட்டுதல் அவசியம்.

அனைத்து இருசக்கர வாகன ஓட்டுநர்களும் தலைக்கவசம் அணிவதை உறுதிசெய்யும் வகையில், இரு சக்கர வாகன ஓட்டுநர் உரிமம் பெறவேண்டுமானால், தலைக்கவசம் வைத்திருப்பது கட்டாயமாக்கப்படுகிறது. இருசக்கர வாகன விற்பனையாளர்கள் அனைவரும் தமது வாகன விற்பனையோடு வாகனம் ஓட்டுவதற்குத் தேவையான தலைக்கவசத்தினையும் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யவேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இருசக்கர வாகன ஓட்டுநர் உரிமம் பெறுவதற்கான பழகுநர் உரிமம் பெற்று வாகனம் ஓட்டும் பயிற்சியின்போதே தமது பாதுகாப்புக்காக தலைக்கவசம் தேவை என்பதால் இருசக்கர வாகன பழகுநர் உரிமம் பெற்ற உடனேயே தரமான தலைக்கவசம் வாங்கி அணிந்து வாகனம் ஓட்டும் பயிற்சி அவசியம். அனைத்து வாகனப் பயிற்சி நிறுவனங்களும் இதனை உறுதி செய்தல் வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளார்கள்.

இருசக்கர வாகன ஓட்டுநர் உரிமம் பெறுவதற்கான வாகனம் ஓட்டிக் காண்பிக்கும் தேர்வுக்கு தலைக்கவசம் அணிந்து இருசக்கர வாகனம் ஓட்டிக் காண்பிக்க வேண்டும் என்ற நடைமுறை 21.08.2015 முதல் புதுச்சேரி, காரைக்கால், மாஹே, ஏனாம் மற்றும் அனைத்துப் போக்குவரத்துத் துறை கிளை அலுவலகங்களிலும் கட்டாயமாக்கப்படுகிறது.

இளைய சமூகத்தினர் உட்பட அனைத்து தரப்பு மக்களின் பாதுகாப்பினையும் தலைக்கவசம் அணிவது பாதுகாக்கும் என்பதால், புதுச்சேரி போக்குவரத்துத் துறையின் இந்த நடவடிக்கைக்கு அனைவரும் ஒத்துழைப்பு நல்கி தமது பாதுகாப்பினையும் உறுதிசெய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

GOVT OF PONDICHERRY
TRANSPORT DEPARTMENT

(எஸ்.டி.சுந்தரேசன்)
போக்குவரத்து ஆணையர்